DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

SINGAMPUNARI

STC. No. 01 /2022 PW . 5

பெயர் : அலெக்ஸ் **தந்தை/கணவர் பெயர்: ஆண்டி**

ஊர் : **தாலுகா:**

வயது : **தொழில்:**

ஜாதி : **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.10.2025

(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

08.10.2025 முதல் விசாரணை:

1. நான் தற்போது எஸ்எஸ்கோட்டையில் வசிக்கிறேன். கூலி வேலைசெய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். 2019ம் வருடம் விபத்து வழக்கு சம்பந்தமாக கிருஷ்ணாபுரம் அருகே விபத்து நடந்த இடத்தில் எஸ்எஸ்கோட்டை காவல்நிலைய சார்பு ஆய்வாளர் வரைபடம் தயார்செய்து விசாரணை செய்தார். அதில் நானும், சாட்சி சண்முகம் என்பவரும் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் செய்தோம். **அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

2. சம்பவ இடம் வளைவான பகுதி என்றால் சரிதான். எதிரே வரும் வாகனம் தெரியாது. போலீசார் என்னை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் கிருஷ்ணாபுரம் வளைவை அடையாளம் காட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் விபத்துக்குண்டான இரு வாகனங்களும் இருந்தது. வரைபடத்தில் மேற்படி வாகனங்களை காண்பித்தார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இருபுறம் வீடுகள் உள்ளது என்றால்சரிதான். சம்பவ இடத்திற்கும் காவல்நிலையத்திற்கு சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்றால் ஞாபகமில்லை.

மறுவிசாரணை இல்லை.